


நீடித்து நிற்கும் எந்த ஒரு போராளி இயக்கம் அல்லது தீவிரவாத இயக்கத்தையும் எடுத்துக்கொள்ளுங்கள். இரண்டு குணங்களை அவர்களிடம் பார்க்க முடியும். முதலாவது, அதிரடி. எதற்கும் அச்சப்படாமல் பாணா கிளப்புவது. இரண்டாவது, குணம். டிஃபென்ஸ். தற்காப்பு ஆட்டம் ஆடுவது. எப்போது பதுங்க வேண்டுமோ, அப்போது பதுங்க வேண்டும். பாய வேண்டிய தருணத்தில் மட்டுமே பாய வேண்டும். அப்படி இல்லாமல், எல்லா சந்தர்ப்பங்களிலும் உணர்ச்சிவசப்பட்டு அதிரடிக் காரியங்களில் இறங்கினால், கண்டிப்பாக இழப்புகள் இருந்தே தீரும்.

சில சமயங்களில் அதிரடிகளைக் காட்டிலும் தற்காப்பு உத்திகள் மிகுந்த பலத்தைக் கொண்டு வந்து சேர்க்கும். எதிர்பாராத லாபங்கள் சித்திக்கும். பதுங்கியிருக்கும் நேரத்தில், இன்னும் பலத்தை அதிகரித்துக் கொள்ள வாகான சந்தர்ப்பங்கள் அமையலாம். எதுவும் நடக்கலாம்.

நவாஸ் ஷெரீஃப் அரசால் தனக்கு ஆபத்து என்று தெரிந்ததும், லஷ்கர் செய்த முதல் அதிரடி, ஒரு சிறந்த தற்காப்பு நடவடிக்கையை மேற்கொண்டதுதான்.

மர்க்கத் உல் தாவா வால் இர்ஷாத் என்கிற அமைப்பை நடத்திக்கொண்டிருந்த புரொபசர் ஹபீஸ் முஹம்மது சயீதுக்கும் லஷ்கர் இ தொய்பா என்கிற ராணுவ அமைப்புக்கும் ஸ்நானப் பிராப்தி கூடக் கிடையாது என்று சொல்கிற மாதிரி ஒரு காரியத்தைச் செய்தார்கள். லஷ்கரின் போராளிகளில் யாரைக் கேட்டாலும் 'மர்க்கத் உல் தாவாவா? அப்படின்னா?' என்று கூசாமல் கேட்டுவிடுவார்கள். அதே மாதிரி, புரொபசரும் தனக்கும் லஷ்கருக்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்று எழுதிக் கொடுத்து சூடம் அணைத்துவிட்டார்.

ஒரு வகையில் அது உண்மையும் கூட. என்ன செய்தார்கள் என்றால், பல்வேறு போராளி இயக்கங்களுடன் நீண்ட நாள் தொடர்பில் இருந்தவரும், மிகத் தீவிர ஜிஹாதியும் மதவாதியுமான மௌலானா அப்துல் வாஹித் காஷ்மீரி என்கிற பண்டிதரைக் கூப்பிட்டு, லஷ்கரைத் தாரை வார்த்துக் கொடுத்துவிட்டார் புரொபசர்.

இந்த மௌலானாவின் பெயரை இன்னொரு தரம் திரும்பிப் போய்ப் படியுங்கள். கடைசிச் சொல்லின் அர்த்தம், அவர் காஷ்மீரைப் பூர்வீகமாகக் கொண்டவர் என்பது. ஆனால், இந்திய சுதந்திரம் - தேசப் பிரிவினையின்போது, பாகிஸ்தானுக்குப் புலம் பெயர்ந்த குடும்பத்தைச் சேர்ந்தவர். காஷ்மீர் கண்டிப்பாக பாகிஸ்தானுக்குச் சொந்தமான ஒரு நிலப்பரப்பு என்னும் கருத்தாக்கம் கொண்டவர். அதற்காக ராணுவ நடவடிக்கை மேற்கொள்வதைத் தவிர, வேறு வழியில்லை என்பதில் உறுதியாக இருப்பவர். அரசாங்கங்களால் நயாபைசாவுக்குப் பிரயோஜனமில்லை, அர்ப்பணிப்பு உணர்வுள்ள ஜிஹாதி இளைஞர்கள் மூலம்தான், காஷ்மீரைக் கைப்பற்ற முடியும் என்பது அவரது சித்தாந்தம். அதற்காகத்தான் அவர் பாடுபட்டுக் கொண்டிருந்தார்.

ஆனால், இந்த மௌலானாவிடம் லஷ்கரை ஒப்படைக்கும்போது, புரொபசர் இதையெல்லாம் சிந்தித்துக் கொண்டிருக்கவில்லை. நமக்கு வேண்டியது என்ன? லஷ்கர் இ தொய்பா என்கிற இயக்கம் உருத்தெரியாமல் அழிந்துபோய்விடக்கூடாது. சில இளைஞர்கள் இருக்கிறார்கள். இன்னும் பல பேர் வரப்போகிறார்கள். ஆயிரக்கணக்கான போராளிகள் இங்கே பிறந்து வளரப் போகிறார்கள். இஸ்லாத்துக்கு எதிரான சக்திகளை ஒழிக்கத் தம்மாலான காரியத்தை லஷ்கர் ஆற்றப் போகிறது. தவிரவும், பாகிஸ்தானிலுள்ள பிற குட்டி இயக்கங்களைப் போல, லஷ்கருக்கு உள்ளூர் பிரச்னைகள் சார்ந்த கோரிக்கைகள் ஏதும் கிடையாது. பிரிவினைப் பக்கவாத வியாதி ஏதுமில்லை. அல் காயிதா போல, ஹிஸ்புல்லா போல உலகின் அதிபலம் வாய்ந்த ராணுவங்களில் ஒன்றாக அது வார்த்தெடுக்கப்பட வேண்டும். யாரும் நெருங்க முடியாத மாபெரும் காரியங்களைத் தனித்து சாதிக்கக்கூடிய வல்லமை பொருந்தியதாக இருக்க வேண்டும்.

இவைதானே? இதற்குச் சரியான ஆள் மௌலானா அப்துல் வாஹித் காஷ்மீரிதான் என்று புரொபசர் நினைத்தார். உடனடியாகச் செய்யவேண்டியது, பாகிஸ்தான் அரசாங்கத்தின் கிடுக்கிப் பிடியிலிருந்து லஷ்கரைக் காப்பாற்றிக் கரை சேர்ப்பது. அடுத்த காரியம், மேலே சொன்னது.

ஆகவே, மௌலானாவைக் கூப்பிட்டுப் பேசினார்கள். மர்க்கத் உல் தாவாவால் இர்ஷாத் என்கிற இஸ்லாம் வளர்ப்பு நிறுவனத்துக்கும் லஷ்கர் இ தொய்பா என்கிற தனி ராணுவத்துக்கும் யாதொரு சம்பந்தமும் கிடையாது. மௌலானா அவர் இஷ்டத்துக்கு லஷ்கரை வளர்த்து, வார்த்து எடுக்கலாம். ஆயத்தப் பயிற்சிகளிலிருந்து ஆயுதப் பயிற்சிகள் வரை கொடுத்து, உரிய தேவைகளுக்கு லஷ்கரைப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்று ஏற்பாடானது.

கிட்டத்தட்ட தத்துக் கொடுப்பது மாதிரிதான். தத்துப் பெறுபவர் முற்றிலும் தகுதி வாய்ந்த நபர் என்பதுதான் புரொபசருக்கு இருந்த சந்தோஷம். என்ன இருந்தாலும் நிறுவனர் என்கிறபடியால், தூர இருந்து ரகசியமாக வழிகாட்டும் பணியை மட்டும் தான் தொடர்ந்து மேற்கொள்ள முடியும் என்றும் சொல்லியனுப்பினார்.

மௌலானா தன்னிடம் ஒப்படைக்கப்பட்ட இளம் போராளிகளுடன் லாகூரை விட்டுப் புறப்பட்டார்.

மறுபுறம், புரொபசர் தன்னுடைய மர்க்கத் உல் தாவா ஒரு பரிபூரண மத அமைப்புதான், இஸ்லாத்தை போதிப்பதைத் தவிர, தான் வேறெந்தக் காரியத்தையும் செய்யவில்லை என்பதை அழுத்தம் திருத்தமாக நிரூபிக்கும் விதத்தில், தனது கதவுகளை அகலத் திறந்து வைத்தார். நிறைய பொதுக்கூட்டங்கள், ஆன்மிக மாநாடுகள், சிறப்பு வகுப்புகள் என்று நடத்த ஆரம்பித்தார். மூடப்படாத வாசல்களைக் கொண்ட அமைப்பு என்று அவருடைய நிறுவனம் பெயர் பெறத் தொடங்கியது. ஆயுதங்களல்ல, ஓர் அரை பிளேடு கூட அவரது அலுவலகத்தில் கிடைக்காது. எவ்வித பாதுகாப்பு ஏற்பாடுகளும் இல்லாமல்தான் வெளியே வருவார், நண்பர்களைச் சந்திப்பார், கூட்டங்களுக்குப் போவார்.

நிறுவனத்தின் கணக்கு வழக்குகள் அனைத்தையும் திறந்த புத்தகமாக்கினார். யாரும் வரலாம், யாரும் பரிசோதிக்கலாம். வரி விவகாரங்களிலிருந்து வழி விவகாரங்கள் வரை அனைத்திலும் வெளிப்படையான அணுகுமுறையைக் கடைப்பிடிக்கத் தொடங்கினார். ரகசியம் என்கிற பேச்சுக்கே இடமில்லை.

எனவே, அமெரிக்கப் புகாரின் பேரில் நவாஸ் ஷெரீஃப் அரசு புரொபசரையும் அவரைச் சார்ந்தவர்களையும் குடைந்தெடுக்கத் தொடங்கியபோது, உருப்படியாக ஓர் ஆதாரமும் தேறவில்லை.

எங்கே போனார்கள் லஷ்கர் போராளிகள்?

நாம் லாகூரில் கழித்த தினங்கள் போதும். இப்போது லஷ்கர் போன பாதையில் போயாக வேண்டும். அது, லாகூரிலிருந்து முஸஃபராபாத் போகிற பாதை.

புரொபசரிடமிருந்து மௌலானா வசத்துக்கு வந்தபிறகும் கூட பல காலத்துக்கு லஷ்கர் இ தொய்பாவின் தலைமையகம் லாகூராகவே இருந்தது என்று ஒரு சாரார் இன்னும் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். இதற்கு வலுவான ஆதாரங்கள் ஏதுமிருப்பதாகத் தெரியவில்லை. நவாஸ் ஷெரீஃப் பதவிக் காலத்தில், அதற்கான அரசியல் சூழலும் சரியாக இல்லை. கண்டிப்பாக, லஷ்கர் போன்ற ஒரு வளரும் இயக்கத்தைப் பிரச்னைக்கு நடுவே வைத்துக் கொண்டிருக்க யாரும் விரும்பமாட்டார்கள்.

ஒருவேளை, காலிப்பெருங்காய டப்பாவில் வாசனை மட்டும் மிச்சமிருப்பது போல, லாகூரை விட்டுப் போன பிறகும் ஒரு சில தொடர்புகள் அங்கே எஞ்சியிருந்திருக்கலாம். மற்றபடி தலைமையகத்தையே லாகூரில் வைத்துக்கொண்டு பயிற்சியளிக்க, மௌலானா மசாலா இல்லாத ஆள் இல்லை.

அன்றுமுதல் இன்றுவரை, பாகிஸ்தானில் இருந்து கொண்டு இந்தியாவில் தீவிரவாதம் வளர்க்க விரும்பும் அத்தனை இயக்கங்களுக்கும் அடைக்கலம் கொடுத்துக் கொண்டிருப்பது, பாகிஸ்தான் வசமிருக்கும் காஷ்மீரின் சில பகுதிகள்தான். கொட்லி என்று ஒரு பிராந்தியம். சுஃபைதா என்றொரு பிரதேசம். பட்ராஸி என்றொரு பகுதி. டர்க்குடி, முஸஃபராபாத், கில்கிட் என்று முழு காஷ்மீரின் வடமேற்குப் பகுதி எல்லைகளாக இருந்து 1948-ல் இந்தியா - பாகிஸ்தான் யுத்த நிறுத்தத்தின்போது, பாகிஸ்தான் வசம் போய்விட்ட நிலப்பரப்பில் இருந்துதான் பெரும்பாலும் இவர்கள் செயல்படுவது வழக்கம்.

இந்தப் பகுதிகளை 'பாகிஸ்தான் அபகரித்துக் கொண்ட காஷ்மீர்' என்று இந்தியா சொல்லும். 'சுதந்திர காஷ்மீர்' என்று பாகிஸ்தான் சொல்லும். அந்த காஃபி டாஃபி யுத்தம் நீடித்துக் கொண்டிருப்பதை தேவைப்பட்டால், பிறகு பார்த்துக் கொள்ளலாம். இப்போது லஷ்கர்.

லாகூரிலிருந்து கூடாரத்தைக் காலி செய்துகொண்டு வேறு இடம் தேடிப்போன லஷ்கருக்கு, முஸஃபராபாத் சரியான, வாகான பிராந்தியமாக அமைந்தது. ஒரு பக்கம் ஜீலம் நதி. இன்னொரு பக்கம் நீலம் நதி. நடுவே மிச்சமிருக்கும் நிலப்பரப்பிலெல்லாம் முரட்டுத்தனமாக ஒரு தாதா போல் லுங்கியை மடித்துக்கட்டி எழுந்து நிற்கும் இமயத்தின் பல குட்டிச் சிகரங்களைக் கொண்ட மலைப்பரப்பு. ஒரு லாங் ஜம்ப் செய்தால், இந்திய எல்லைக்குள் வந்து விழுந்துவிடலாம். பாரமுல்லாவும் குப்வாராவும் பக்கத்து வீடுகள். ஒரு மாரத்தானுக்குப் பழகிவிட்டால் ஜம்முவுக்கும் ஸ்ரீநகருக்கும் வைகோ மாதிரி நடந்தே வந்து போகலாம்.

கிட்டத்தட்ட ஆறாயிரம் சதுர கிலோ மீட்டர் பரப்பளவு. காடுதான். குளிர்தான். மலைதான். பனிதான். வேறு எதுவும் கிடையாது. துப்பாக்கி சுட்டு, பீரங்கி பழகி பயிற்சி எடுத்துக் கொண்டால், ஏனென்று அக்கம்பக்கத்தில் யாரும் கேட்கமாட்டார்கள். கேட்க ஒரு நாதி கிடையாது என்பதுதான் விஷயம். அந்தளவு, இடத்துக்கு மக்கள் தொகை குறைவு. தவிரவும், எல்லைப் பகுதிகளுக்கே உரிய சௌகரிய, அசௌகரியங்கள் அங்கே உண்டு என்பதால்தான், பெரும்பாலான தீவிரவாத இயக்கங்கள் 'முஸஃபராபாத்துக்கு ஜே' என்று சொல்கின்றன.

லஷ்கர் போராளிகளை அங்கே அழைத்து வந்த மௌலானாவுக்கு, காஷ்மீர்தான் ஆதிக்கனவு என்பதை ஏற்கெனவே பார்த்தோம். எப்படியாவது காஷ்மீரை இந்தியாவின் பிடியிலிருந்து விடுவித்துவிட வேண்டுமென்கிற தன்னுடைய பால்யக் கனவை, லஷ்கர் இளைஞர்களைக் கொண்டு செயல்படுத்துவதுதான் அவர் திட்டம். ஒருவேளை, புரொபசர் அவர்களுக்கு வேறு கனவை ஊட்டி வளர்த்துவிட்டிருந்தால் அது கஷ்டம். ஓர் இலக்கு என்று அதுவரை ஏதும் அவர்களுக்குத் திட்டவட்டமாகச் சொல்லப்படவில்லை என்பதால், எளிதில் காஷ்மீரை அவர்கள் நெஞ்சுக்குள், அவரால் திணித்துவிட முடிந்தது.

காஷ்மீர். அதை இந்தியாவின் பிடியிலிருந்து விடுவிக்க வேண்டுமென்பது முதல். பிறகு, அதை பாகிஸ்தானுடன் இணைப்பது என்கிற அடுத்த திட்டம். நடுவே, இரண்டு நாடுகளுக்கும் கூடாது; காஷ்மீர் ஒரு தனி சுதந்திர தேசமாக இருக்க வேண்டும் என்கிற கொள்கையுடன் போராடும் வேறு சில இயக்கங்கள் குறுக்கே வரும். அவர்களைப் பிறகு பார்த்துக் கொள்ளலாம். இப்போதைக்கு, டார்கெட் இந்தியா.

மௌலானாவுக்கு நிறையவே அரசியல் தெரியும். அதைவிட முக்கியம், அரசியல்வாதிகளைப் பற்றித் தெரியும். என்ன செய்தால் பிரச்னை வரும் என்பதைக் காட்டிலும், எதெல்லாம் பிரச்னையில்லாத காரியம் என்பதை அவர் நன்கறிவார். 1948-ம் வருஷம் தொடங்கி காஷ்மீரை முன்வைத்து என்ன செய்தாலும், பாகிஸ்தானில் கண்ணை மூடிக்கொண்டு வோட்டுப் போட்டுவிடவும் கொட்டிக் கொடுத்து அனுப்பவும் அரசியல்வாதிகள் உண்டு. காஷ்மீருக்காகப் போராட ஓரியக்கம் இருக்கிறதென்றால், அவர்களுக்கு உதவ மாட்டேன், ஒத்துழைக்க மாட்டேன், அவர்களை வளர விடமாட்டேன் என்று அங்கே எந்த அரசியல்வாதியும் சொல்ல மாட்டார்கள். சொல்ல முடியாது என்பதுதான் விஷயம்.

மக்கள் அவர்களைக் கொத்து பரோட்டா போட்டு விடுவார்கள். அந்தளவுக்கு காஷ்மீர் என்கிற நிலப்பரப்பை ஒரு கனவாக விதைத்து, போதை மருந்து போல் ரத்தத்தில் ஊறச் செய்து உருவேற்றிவிட்டிருந்தார்கள். காஷ்மீர் மட்டும் கிடைத்துவிட்டால், பாகிஸ்தான் சொர்க்க லோகமாகிவிடுமா என்றெல்லாம் கேட்கவே முடியாது. கேட்கவும் கூடாது. முதலில் காஷ்மீர். மற்றவை பிறகு. அவ்வளவுதான்.

ஆகவே, இளம் லஷ்கர் போராளிகளின் மனத்தில் காஷ்மீர் என்கிற கனவை விதைத்து, அதற்காகப் போராடுவதுதான் பிறவிப் பயன் என்று எடுத்துச் சொல்லி, காஷ்மீரின் ஒரு பகுதியான முஸஃபராபாத்திலேயே அவர்களைத் தங்க வைத்துப் பயிற்சியளிக்கத் தொடங்கியபோது, கண்டிப்பாக பாகிஸ்தான் அரசால் எந்தப் பிரச்னையும் தங்களுக்கு இல்லை என்பதை மௌலானா மனதார உணர்ந்திருந்தார். வேண்டியதெல்லாம் ஒன்றுதான். அரசாங்கம் என்ன உதவி செய்யும் என்கிற பட்டியல்.

கணக்குப் போட ஆரம்பித்தார். கூடவே, பயிற்சிகளையும் தாமதமில்லாமல் தொடங்கினார். அதுநாள் வரை அரை டிக்கெட் போராளிகளை மட்டுமே பார்த்து வந்த முஸஃபராபாத், முதன்முதலில் பக்கா புரொஃபஷனலாகப் போர்ப்பயிற்சி பெறும் ஒரு கோஷ்டியைப் பார்த்தது.

மௌலானா அப்துல் வாஹித் காஷ்மீரி எப்பேர்ப்பட்ட ஆள் என்பது அப்போது புரிந்தது. புரொபசர் தங்களை ஒரு சாதாரண ஆளிடம் அனுப்பவில்லை; மாறாக போர்க்கலை நுணுக்கங்களில் மாஸ்டரான ஒருத்தரிடம்தான் அனுப்பியிருக்கிறார் என்று லஷ்கர் இளைஞர்களும் நினைத்தார்கள். பகலெல்லாம் பயிற்சி. இரவு படுத்தால் கனவு. கனவில் காஷ்மீர் வரும். அதைத் தாங்கள் போராடி வென்று எடுக்கும் காட்சி வரும்.

முஸஃபராபாத்தின் குளிருக்கு, அவர்களுக்கு அந்தச் சூடான நினைவு ஒன்றுதான் போர்வை.